

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2026) முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினரும், மொழிப்போர் தளகர்த்தருமான எல்.கணேசன் அவர்கள் காலமானதையொட்டி, தஞ்சாவூரில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, கோவி. செழியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் ச.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் க.அன்பழகன், துரை.சந்திரசேகரன், என்.அசோக்குமார், நா.எழிலன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் துணை முதல்வர் பிறந்தநாள்!

# திரு.வி.க. நகர் தொகுதியில் மாபெரும் சிலம்பப் போட்டி! 500 மாணவர்களுக்குப் பரிசு!

## தாயகம் கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்குகிறார்!

சென்னை, ஜன.5-

கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் மாபெரும் சிலம்பம் போட்டி மற்றும் 500 மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா இன்று 05.01.2026 மாலை 5.00 மணியளவில் எவர்வின் வித்யாஷ்ரம் பள்ளி வளாகம், பெரம்பூர் நெடுஞ்சாலை, ஜமாலியாவில் நடைபெறுகிறது.

கழக துணை அமைப்பு செயலாளர், வழக்கறிஞர் ப. தாயகம்கவி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

வரவேற்புரை: வடக்கு பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிக்கண்ணு, தொகுதி தேர்தல் பார்வையாளர் தண்டலம் கிருஷ்ண மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன், 71வது வட்ட செயலாளர் பரிமளாசுரேஷ்

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் மேயர் பிரியா ராஜன், கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.

இசட் ஆசாத், சரிதா மகேஷ் குமார், வானவில் விஜய், ந. துலுக்காணம், பி.உதயசங்கர், P.J.துளசிங்கம், M.பெரோ ஸ்கான், பெரம்பூர் R.மகேஷ், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, மு.சரவணன் எம்.சி., ச.அம்பேத்வளவன் எம்.சி., ரமணி லோகேஷ் எம்.சி., தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி., M.Z.அபோய், M.A.டீக்கா, M.தமீம், பொல்லு டி.சுரேஷ்குமார், எஸ்.புஷ்பராஜ், ஜி. கிருஷ்ணகுமார், வி.கே.வெங்கடேசன், பா.பி.தாஸ், S.சசிகுமார், S.வெங்கடேசன், J.மணிகண்டன், P.ஸ்ரீதர் ராஜன்.

திரு.வி.க. நகர் வடக்கு மற்றும் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் பெரம்பூர் ஆர்.ராஜன், தில்லைகதிரவன், புல்லட் கி. ரமேஷ், அ.புவனவதி, கினார் ஆறுமுகம், அ.கோவிந்தன், த.கருணாநிதி, பி.சுகுமார், வனஜாசண்முகம், அ.கருணாநிதி,

மாவட்ட அணிகளின் இணை துணை அமைப்பாளர்கள் எல்.பாண்டுரங்கன், கனல் கங்கா, இ.ஜோசுவா, பா.ஜலபூஷணம், எஸ்.காதர்மீரான், கே.லட்சுமிஜி, சூர்யகுமார், எப்.செபஸ்டின், எஸ்.கே.சிவகுமார், வி.பிரகாஷ், அ.சாக்ரடீஸ், டி.டிக்ரோஸ்ஜான்ரூவில், E.N.K.வீரமணி, எ.ஜான், இ.விநாயகம், M.கமலநாதன், G.பிரீத்தி, C.தங்கராஜ், சந்தனராஜ், வி.வில்பர்ட்ஜான், எஸ். சதீஷ்குமார், ஜெ.வசந்த் கோகுல், எம்.விக்னேஷ், ஆர். நிலவழகன், ஒட்டேரிசூரி, M.S. மைனர்பாபு, ஜி.ராஜ்குமார், எஸ்.ஜெயகுமார், கே.ராமமூர்த்தி, எஸ்.சுரேஷ், ந.தமிழ்மணி, ஜி.சுரேஷ்கோபி, ஏ. ஜான், இரா.தனசேகரன், எம். சண்முகவேல், ஆர்.கிருஷ்ணவேணி, அ.சாவித்திரி, கே.ஹரி பிரசாத், கோ.கருணாகரன், அ.மகேஷ், AGS.கோல்டுஜி, எஸ்.உதயசீலன்,

மாவட்ட பிரதிநிதிகள் அ. விஜயகுமார், வ.நாமதேவன், க.எழிலன், மு.துரைசாமி, ஜெ. அண்ணாதுரை, வி.ஜெகன், சுவிட்பாபு பிரகாஷ், சீனிவாசன், எம்.விஜயகுமார், ஆர். ராஜராஜன், பி.சதிஸ், பி.இளஞ்செழியன், டி.ராஜி, கி.நாகலிங்கம், நெல்லை மா.முத்தையா, இரா.புருஷோத்தமன், நா. ராஜேந்திரன், எஸ்.பாபு, பா. பாபு, மனோகரன், வே.து.தாமரைசெல்வன், எல்.சுப்ரமணி, எச்.திவாகர், அ.கதிரவன்.

தொகுதி மற்றும் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் ஜெ.எம்.நிறைமொழி, ஐடி. விங். எஸ்.கௌதம், ஜெ.அவிநாஷ், வி.ஸ்டீஃபன் டி சில்வா, வெ.புருஷோத், எம்.சக்திவேல், தி.கிருஷ்ணகுமாரி, மு. கௌரி, விஜயமகேந்திரன், B.ஜெகதீஷ், மெடிக்கல் சதீஷ், செ.ராஜ்குமார், கே.பிரேமா, ஈஸ்வரிகண்ணன், எம்.கிரிஜா, சாந்தி மாசிலாமணி, வி.பகத் சிங், சிவஞானம், மா.திவ்யா, பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி பன்னீர்செல்வம், எம். பிரபு, ஜி.சரண்ராஜ், நாராயணன், ஜி.சரவணன், வசி முல்லா, வி.பிரபுதாஸ், நரேந்தர், மாணவர் அணி ஜெ. நரேஷ்குமார், மனோஜ்குமார், மணிகண்டன், ரஞ்சித்குமார், யுவராஜ், விஜயகுமார், தனகுமார், VGS.கௌதம், பிரகாஷ், சபரிவெங்கடேசன், கிஷோர், அஜித், தருண்குமார், மதன்குமார், ராஜேஷ், மைக்கேல், தமிழ்வாணன்.

மகளிர் அணி ஆர்.புஷ்பம்மாள், வி.சாந்தா, லதாபிரகாஷ், உஷாவிஜயகுமார், என். கஸ்தூரி, தீபா, ராஜலட்சுமி, சுமதி, குமரிவிஜயகுமார், எஸ். தனலட்சுமி, எஸ்.சீமா, எஸ். உஷா, கோ.காயத்திரி, ஆர். கமலா, ஆர்.சிலோர்மணி, எம். தமிழ்செல்வி,

தகவம் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள் M. ஆனந்த், K.லியோ, வினோத், S.பிரேம், A.W.ஸ்டீபன், V. சுரேஷ், R.ஸ்ரீனிவாசன், S.விஜயலட்சுமி, N.சுரேந்திரன், N.C.சரவணன், பிரேம், வினோத்பிரபு.

திரு.வி.க.நகர் வடக்கு தெற்கு பகுதி வட்ட கழக நிர்வாகிகள் வட்டம் 71- த.வே. ஏகாம்பரம், வி.பாலாஜி, வி.வினோத், ஜமுனா, குணசேகரன், ந.சங்கர், து.பிரகாசம், எஸ்.பாபு, ரெட் கே. லிங்கேசன், ரவிகுமா,ர் சோ. ராமமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

நன்றியுரை: 71வது அ வட்ட செயலாளர் மா.ருத்ரமூர்த்தி

### ரூ.15.30 கோடியில் 17 முடிவுற்ற பணிகள் திறப்பு!

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.108.90 கோடி மதிப்பீட்டில் 19 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜன.5-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.01.2026) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 திருக்கோயில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோயில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள் மற்றும் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்து களின் பயன்பாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.**

இந்து சமய அறநிலையத்துறையானது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள், திருத்தேர்களை பழுது பார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், ஒருகால பூசைத் திட்டம் விரிவாக்கம், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் பிள்ளைகளுக்கு மேற்படிப்பிற்கான கல்வி உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செம்மையாக செயல்படுத்தி வருகிறது.

11 திருக்கோயில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயிலில் 59.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அக்னி தீர்த்தம் படித்துறை, வாகன நிறுத்துமிடம், பிர்லா காட்டேஜ் பகுதி, திருக்கோயில் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அடிப்படை வசதி மேம்படுத்தும் பணி உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுதல்; 16.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தென்காசி மாவட்டம், குற்றாலம், ஸ்ரீ பராசக்தி வித்யாலயா சி.பி.எஸ்.சி. பள்ளியில் புதியதாக 54 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்; திருவாரூர், தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கமலாலய திருக்குளம் திருப்பணி, தேவாசிரிய மண்டபம் மற்றும் முன்மண்டபம் பழுது பார்த்து புதுப்பித்தல்;

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயிலில் 6.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமாளிகை பத்தி மண்டபம் கட்டுதல்; புதுக்கோட்டை மாவட்டம், குலமங்கலம், பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் 3.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சன்னதி மகா மண்டபம் திருமதில்சுவர் திரும்ப கட்டுதல்; சென்னை, வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலில் 3.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்;

தேனி மாவட்டம், குச்சனூர், சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம் கட்டுதல்; புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாளவிடுதி, அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் 2.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சன்னதி மகாமண்டபம் திருமதில்சுவர் திரும்ப கட்டுதல்;

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் கட்டுதல்; பெருந்துறை, வாகைத் தொழுவம்மன் திருக்கோயிலில் 1.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜகோபுரம் கட்டுதல்; திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு, சௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயிலில் 1.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் கட்டுதல்; கோவை மாவட்டம், ஒத்தக்கால் மண்டபம், நவகோடி நாராயணப் பெருமாள் திருக்கோயிலில் 1.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுதல்; என மொத்தம் 108.90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

7 திருக்கோயில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள், 6 சரக ஆய்வாளர் அலுவலகங்கள் திறந்து வைத்தல் மற்றும் சிற்றுந்துகளை தொடங்கி வைத்தல்

கோவை மாவட்டம், தேக்கம்பட்டி, வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 6.86 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட நடைபாதை மண்டபம், சுற்றுச்சுவர், முடி காணிக்கை மண்டபம் மற்றும் உடைமாற்றும் அறை;

தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம், நாகநாத சுவாமி திருக்கோயிலில் 3.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி; கோவை மாவட்டம், பூண்டி, வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் 1.45 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி; நாமக்கல் மாவட்டம், காளிப்பட்டி, கந்தசாமி திருக்கோயிலில் 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய அன்னதானக் கூடம்;

1.81 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம், தகட்டூர், பைரவநாத சுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகம், மயிலாடுதுறை மாவட்டம், திருஇந்தளூர், பரிமள ரங்கநாதர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி மற்றும் திட்டக்குடி, அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர், இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி, மயிலாடுதுறை மாவட்டம் புத்தூர் மற்றும் சீர்காழி ஆகிய இடங்களில் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்கள்;

ஈரோடு மாவட்டம், சென்னிமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 1.23 கோடி ரூபாய் செலவிலான 3 சிற்றுந்துகள்; என மொத்தம் 15.30 கோடி ரூபாய் செலவிலான 10 முடிவுற்ற பணிகள், 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை. இரவிச்சந்திரன், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக இராமேஸ்வரத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்காதர் பாட்சா முத்துராம லிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், இராமநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் கே. செல்லதுரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆவடி தொகுதி – நடுக்குத்தகை ஊராட்சியில் – பொங்கல் திருநாளை முன்னிட்டு

# தூய்மைப் பணியாளர்கள் - பராமரிப்பு உறுப்பினர்களுக்கு நிதி உதவிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், ஜன.05-

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் பொங்கல் விழாவை முன்னிட்டு நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஆவடி தொகுதி பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் நடுகுத்தகை ஊராட்சியில் நடைபெற்றது.

இதற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ் தலைமை வகித்தார்.

மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி, ஒன்றிய செயலாளர் டி.தேசிங்கு ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு இரு மகளிர் சங்கங்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் நிதி உதவியும், கல்வி உதவித்தொகைக்காக ஒரு லட்சமும் புதியதாக தொடங்க உள்ள மகளிர் சுய உதவி குழுவிற்கு நிதியும் வழங்கினார்.

தொடர்ந்து அவர் முதியோர் பகல் நேரப் பராமரிப்பு மையம், தூய்மை பணியாளர்கள், மகளிர் சுய உதவி குழுக்கள், பொதுமக்களுக்கு 500 பேருக்கு புடவை வேட்டி சட்டை இரவு உணவு, கேஸ் அடுப்பு, குக்கர் அரசி மளிகை பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது பேசிய அமைச்சர் அண்ணாவின் மறைவிற்கு பிறகு திமுக தலைவர் பதவியை முத்தமிழறிஞர் கலைஞர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என தந்தை பெரியார் அறிவுறுத்தியதற்கு இணங்க திமுக தலைவராக பொறுப்பேற்று சீரிய ஆட்சியை நடத்தினார். அதில் குறிப்பாக பெரியாரின் பெண் விடுதலை கருத்துக்களுக்கு சட்ட அங்கீகாரம் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

“பெண் விடுதலையே சமூக விடுதலை” என்பதை அடிப்படைக் கொள்கையாக கொண்ட திராவிட சித்தாந்த மண் தமிழ்நாடு. 2021ல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பின் ‘திராவிட மாடல்’ என்ற சொல் அதிகளவில் பேசுபொருளாக உருவானது. ஆனால் திராவிட மாடலின் அடிப்படை சித்தாந்தம் உருவாகி நூற்றாண்டுகளை கடந்து விட்டது என்பது தான் உண்மை .

பெண்களுக்காக உழைத்த எத்தனை தலைவர்கள் இருந்தாலும் பசுமரத்தாணி போல மக்கள் மனதில் நிலைத்திரு ப்பவர் தான் தந்தை பெரியார் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். கொள்கைகளை பரப்புவதையே முதன்மையான பணியாக கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் பெண்கள் முன்னே ற்றத்தையும், நலனையும் கருத்தில் கொண்டே எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

அதில் குறிப்பாக பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழு கடன், மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி, முதல் பெண் அர்ச்சகர், குடும்பத் தலைவிகள் பெயரில் வீடு, அரசுப்பணியில் பெண்களுக்கு இடஒதுக்கீடு, என பெண்களின் முன்னேற்றத்துக்கான பல திட்டங்களை திமுக அரசு தொடர்ந்து சிறப்பான முறையில் செய்து கொண்டிருக்கிறது

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் நலனில் தனிக் கவனம் செலுத்தி பல திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருவதால் மகளிர், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என அனைவரும் பாதுகாப்புடன் வாழ்கின்றனர். முதலமைச்சர் அவர்களை மனமாரப் பாராட்டுகின்றனர். என அமைச்சர் தெரிவித்தார்

விழாவில் பொது குழு உறுப்பினர் ஜி. விமல்வர்ஷன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் யமுனா ரமேஷ், முன்னாள் ஊராட்சி தலைவர் லட்சுமி, நிர்வாகிகள் பொறியாளர் எம். மோகன், கு.தமிழ்செல்வி, சுமதி விஜயகுமார், ஜெ.சாக்ரடீஸ், எம்.குணாசேகர், ஹரி பாபு, ரமேஷ், ராதாகிருஷ்ணன், உதயா, சாந்தகுமாரி, சந்திரன், நவமணி, புனித ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148 வது வட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர் ஆர். தியாகராஜன் ஏற்பாட்டில் பாக இளைஞரணி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ, வட்ட கழக செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இராமாபுரம் செ.ரவி, ச.சங்கர்கணேஷ் வி.சண்முகநாதன் பகுதி அமைப்பாளர் நரேன்கணபதி மற்றும் பகுதி இளைஞர் அணி சார்ந்த டி.ஆர்.விஜய், சின்னு (எ) பிராசந்த் மற்றும் வட்ட பாக இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வாக்காளர் பட்டியல் SIR திருத்த சிறப்பு முகாம் நேற்று (04.01.2026) ஆலந்தூர் தெற்கு பகுதி, 167 வது வார்டுக்கு உட்பட்ட 25–பாகத்தில் நடைபெற்றது. இதில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12–வது மண்டலக் குழு தலைவர் என். சந்திரன் பார்வையிட்டார். 167 –வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் வீ. ரமணா, அபிஷேக கிருஷ்ணா, பிரான்சிஸ், குருமூர்த்தி, குணா, மகேஷ், அசோக்குமார், ஜாக்லின், சீனிவாசன், சதீஷ், சரவணன், தணேஷ் குமார், துரைராஜ், பாலாஜி,அப்பாதுரை, ஞானசேகரன், சூரிய நாராயணன், சுப்பராய பிள்ளை, அரசு, சீனிவாசன், ஆகியோர் உடன் இருந்தனர்.

# தி.மு.க.வின் மூத்த முன்னோடி எல்.கணேசன் மறைவு!

## பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் இரங்கல்!

திருச்சி, ஜன.5-

திமுகவின் மூத்த முன்னோடி எல்.கணேசன் காலமானார். அவரது மறைவிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் இரங்கல் தெரிவித்தார்.

இவரது மறைவிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது : எனது இனிய நண்பர் திமுகவின் மூத்த முன்னோடி எல்.கணேசன் மரணமுற்ற செய்தியை கேட்டு செய்தி மிகவும் வேதனையை தந்தது. மொழிப்போர் தளபதி என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட எல்.கணேசன் அவர்கள். எல்.ஜி என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட இவர் பேறறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞருடன் நெருங்கிய நட்பில் இருந்தவர். மிசா சட்டத்திற்கு எதிராகவும் போராடியவர்

எல். கணேசன் அனைத்து மக்களிடம் அன்பு பாராட்டும் பெற்றவர்.

அனைவரிடமும் பழகுவதற்கு இனிமையானவர். சமூக சிந்தனையுடைவர், எனக்கு நெருங்கிய நண்பராகவும் திகழ்ந்தவர். திருச்சி பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றிய போது பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் தொகுதி மக்களுக்கு தேவையான உதவிகளை செய்து வந்தார். தமிழக மக்களுக்கு அனைத்து நன்மைகளையும் பாரபட்சம் காட்டாமல் தன்னாலான உதவிகளை செய்து வந்த பெருமை அவருக்குரியது. அவரின் இழப்பு தமிழ் சமுதாயத்திற்கு பேரிழப்பாகும்.

அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் பிரார்த்தனை செய்வோம். அவரின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களுக்கும் எனது சார்பிலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் இவ்வாறு பேராசிரியர் கே.எம். காதர்மொகிதீன் இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி

# மாவட்ட - பகுதி - வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (06.01.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில் எனது (மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.,) தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., வரவேற்புரையில், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, பகுதிச் செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், க.ஜெயராமன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், இரா.லட்சுமணன், அ.முருகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வட்ட செயலாளர்கள், இளைஞர் அணி மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

இளைஞர் அணி மன்றம் அமைத்தல்.

தமிழர் திருநாள் பொங்கல் விழா, விளையாட்டுப் போட்டி நடத்துதல்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.,**

பொறுப்பாளர் - சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 71–(அ) வட்டத்தில் தவறுதலாக நீக்கபட்ட வாக்காளர்கள்,மற்றும் புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணி தொடர்பாக நேற்று முன்தினம் (3.1.2026) வார்டு எண்:73 நியூபோரஸ் சாலையில் சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்ற முகாமினை கழக துணை அமைப்பு செயலாளர் ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ., பார்வையிட்டார். வட்டச்செயலாளர் தமீம்பாய், அப்பு, குலாப் உள்ளிட்ட இயக்கத்தின் முன்னோடிகள் உடனிருந்தனர்.